பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி

மலர்: 16] சென்னை: மார்கழி 7 (21—12—68) சனி ★ வெளியூர்: மார்கழி 8 (22—12—68) ஞாயிறு [இதழ்: 156

கேரள அரசுக்கு டெல்லி கட்டளை!

புதுடில்லி, டிச. 20—

"கடந்த செப்டம்பர் 19-ம் நாள் நடைபெற்ற அடையாள வேலைநிறுத்தத்தையொட்டி மத்திய அரசு ஊழியர்கள் மீதுள்ள வழக்குகளைத் திரும்பப் பெறக் கூடாதென கேரள அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுவிட்டது"

என உள்துறைத் துணையமைச்சர் வி.சி. சுக்லா மக்களவையில் தெரிவித்தார்.

சாதியின் பெயரால் ஓட்டு போடுவது ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைக்கும்

சமூகங்களிடை சுமூகம் நிலவ மத்தியாசுக்கே வாக்களியுங்கள்

நாகர்கோவில் தொகுதி வாக்காளர்களுக்கு காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் வேண்டுகோள்

முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் அவர்கள், நடைபெறவிருக்கும் நாகர்கோவில் இடைத்தேர்தல் குறித்துச் செய்தித் தாள்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:—

"நாடாளுமன்றத்திற்கு ஒருவரைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதற்காக நாகர்கோவில் நாடாளுமன்றத் தொகுதியில் 1969 சனவரி 8-ம் நாள் நடைபெறவிருக்கும் தேர்தல் முக்கியமான ஒன்று.

'தேர்தலின் முக்கியத்துவத்தை உணர்ந்தவன்' என்கிற முறையில், டாக்டர் மத்தியாசை ஆதரிக்கும்படி உளப்பூர்வமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சியைப் பொறுத்தவரையில், அது, எதேச்சாதிகாரத் தன்மையையும் சனநாயக விரோதப் போக்கையும் எதிர்த்துத் தடுத்து நிறுத்திடவே கடந்த பொதுத் தேர்தலின்போது கூட்டணியில் சேர்ந்தது. அந்தக் காரணங்கள் இன்னும் இருந்துவருகின்ற நேரத்தில், கூட்டணியிலிருந்து அக்கட்சி உடைத்துக்கொண்டு வெளியேறி தன் வேட்பாளரை இத்தேர்தலில் நிறுத்தியதன் மூலம் காங்கிரசுக்குத் துணைபோவது வருத்தத்தை அளிக்கிறது.

நாகர்கோவில் வாக்காளர் பெருமக்கள், இடது கம்யூனிஸ்டுகளின் இந்தச் செயலை ஆதரிக்கமாட்டார்கள் என்றும், தங்கள் செல்வாக்கு முழுவதையும் கூட்டணியைச் சேர்ந்த டாக்டர் மத்தியாசுக்கு ஆதரவாகவே செலுத்துவரென்றும் நான் உறுதியாக நம்புகிறேன்.

காங்கிரசுக் கட்சியை எடுத்துக்கொண்டால், அதன் வேட்பாளர், இதுநாள்வரை காங்கிரசுக் கட்சியின் தலைவராக இருந்தவர்; அவருக்கு வாக்குப் போடுவதென்பது இதுகாறும் நாட்டில் எதேச்சாதிகாரத்தை ஒழித்துக்கட்ட எடுக்கப்பட்ட வெற்றி விழா முயற்சிகளுக்குத் தடை உண்டாக்குவது போலாகும். அவருக்கு ஓட்டுப் போடுவதென்பது — அதுவும் சாதிகளின் பெயரால் ஓட்டுப் போடுவதென்பது, இந்த நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊறு தேடுவதாகும். மேலும், சமூகங்களுக்கிடையே சுமூக நிலை நீடிக்கச் செய்ய உருவாக்கப்பட்டுள்ள — மிகவும் வேண்டப்படுகின்ற சமூக அமைதியைக் கெடுப்பதாகவும் ஆகும்.

இக்காரணங்களாலும், இன்றுள்ள நிலையை உத்தேசித்தும், இந்த நாட்டின் நலனில் மிகுந்த அக்கறையோடும் நாகர்கோவில் வாக்காளப் பெருமக்களை நான் வேண்டுகிறேன் — தங்கள் மேலான வாக்குகளின் வலிவை உணர்ந்து, இம்முறை அதனை டாக்டர் மத்தியாசுக்கே அளிக்க வேண்டுமென்று நான் இறைஞ்சுகிறேன். இவ்வாறு செய்வதன் மூலம், இந்நாட்டுக்கும் வருங்கால சந்ததிக்கும் நற்றொண்டாற்றியவர்களாக ஆவீர்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்."

மத்தியாசுக்கே வெற்றி வாய்ப்பு

அமைச்சர் கருணாநிதி நம்பிக்கை

மதுரை, டிச. 20—

"நாகர்கோவில் நாடாளுமன்ற இடைத் தேர்தலில், கம்யூனிஸ்டுக் கட்சி தனது வேட்பாளரை நிறுத்தியிருந்தபோதிலும், அங்கு காங்கிரசுக் கட்சியின் சார்பில் நிற்கும் காமராசருக்கும் -- தி. மு. கழகத்தின் தலைமையிலான கூட்டணியின் ஆதரவுடன் சுயேச்சை வேட்பாளராக நிற்கும் டாக்டர் மத்தியாசுக்குமே நேரடிப் போட்டி என்று சொல்லலாம்; அந்த நேரடிப் போட்டியில் டாக்டர் மத்தியாசே வெற்றி பெறுவார் என நினைக்கிறேன்"

என்று பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், மதுரை விமான நிலையத்தில் தம்மைச் சந்தித்த செய்தியாளர்களிடம் கூறினார்.

"இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சி இந்தத் தேர்தலில் வேட்பாளரை நிறுத்தியுள்ளதால், நடைபெறவிருக்கின்ற தமிழ்நாட்டு நகராட்சித் தேர்தலில், தி. மு. கழகத் தலைமையிலான கூட்டணியின் வெற்றி வாய்ப்புக்கள் பாதிக்கப்படமாட்டாதா?"

என்று செய்தியாளர் கேட்டபோது, 'பொறுத்திருந்து பாருங்கள்' என்று அமைச்சர் கருணாநிதி பதிலளித்தார்.

"சிறு சம்பவங்கள் நீங்கலாக, நாகர்கோவில் தொகுதியில் தேர்தல் பணிகள் அமைதியுடன் நடந்துவருகின்றன; வன்முறைச் சம்பவங்களோ, அமைதிக் குலைவோ ஏற்பட்டுவிடாதபடி தடுக்கப் போதுமான போலீசுப் பாதுகாப்பு இத்தொகுதி முழுவதும் ஏற்பாடாகியிருக்கிறது" என்றும் அமைச்சர் கூறினார்.

நாகர்கோவிலுக்கு நெடுஞ்செழியன் வருகை

நான்கு நாட்கள் தேர்தல் பிரச்சாரப் பணி

சென்னை, டிச. 21—

நாகர்கோவில் நாடாளுமன்ற இடைத் தேர்தலில் தி. மு. கழகத் தலைமையிலான கூட்டணியின் ஆதரவுடன் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர் டாக்டர் மத்தியாஸ் அவர்களை ஆதரித்துத் தேர்தல் பிரச்சாரம் செய்ய கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், ஞாயிறன்று சென்னையிலிருந்து விமானம் மூலம் திருவனந்தபுரம் செல்கிறார்; அங்கிருந்து காரில் நாகர்கோவில் செல்வார்.

டிச. 25-ஆம் நாள் வரையில் அவர் நான்கு நாட்கள் தொகுதி முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு தேர்தல் பிரச்சாரம் செய்வார்.

ஏற்கனவே அமைச்சர்கள் மு. கருணாநிதி, மா. முத்துசாமி ஆகியோர் கிராமம் கிராமமாகச் சென்று மக்களைச் சந்தித்தும், தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில கலந்துகொண்டும் மத்தியாசுக்கு ஆதரவு திரட்டியுள்ளனர்.

கல்லூரிகளில் சேரப் புது ஏற்பாடு

மாவட்டந்தோறும் பொதுவான தேர்வுக் குழு

கல்வித் துறையின் திட்டம் -- சென்னைப் பல்கலைக்கழகம் பரிசீலனை

சென்னை, டிச. 21—

தொழிற் கல்வியல்லாத கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கான புதிய கூட்டு ஆய்வு முறைத் திட்டம் ஒன்றைத் தமிழக அரசின் கல்வித்துறை அதிகாரிகள் வகுத்தளித்துள்ளனர். இந்தத் திட்டத்தை, சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழு (சிண்டிகேட்) இப்போது ஆராய்ந்துவருகிறது.

இது பற்றிக் கல்லூரி முதல்வர்களின் கருத்துக்களும், ஆய்வுரைகளும் எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிகிறது.

இத்திட்டத்தின்படி, ஒரு மாவட்டத்திலுள்ள எந்தக் கல்லூரியில் சேர விரும்பினாலும் பொதுவாக ஒரே விண்ணப்பம் அனுப்பினால் போதும். இதற்காக நியமிக்கப்படும் ஒரு குழுவுக்கு அந்த விண்ணப்பத்தை அனுப்பிவைத்தால் அந்தக் குழு விண்ணப்பங்கியெல்லாம் ஆராய்ந்து அந்தந்தக் கல்லூரியிலும் உள்ள இடங்களுக்குத் தக்கவாறு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்.

சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், தென் சென்னைக்கு ஒன்றும், வட சென்னைக்கு ஒன்றுமாக இரண்டு குழுக்கள் இருக்கும்.

பெரும்பாலான தனியார் கல்லூரிகளின் முதல்வர்கள், இந்தத் திட்டத்தை விரும்பவில்லை என்று கூறப்படுகிறது; அவர்கள் விரும்பாததற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன.

விண்ணப்பப் பாரங்களை நேரடியாகப் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஒவ்வொரு கல்லூரிக்கும் ஆண்டுக்கு ரூ. 10 ஆயிரம்முதல் ரூ. 15-ஆயிரம் வரை கிடைக்கக்கூடிய வருமானத்தை இழக்க வேண்டி வரும் என்பது ஒரு காரணம்.

ஒவ்வொரு கல்லூரியும் மாணவர்களைச் சேர்ப்பதில் அததற்குரிய பாரம்பரியமான முறைகளையும், உரிமைகளையும் விட்டுக் கொடுப்பதனால், அந்தந்தக் கல்லூரிக்கும் இருந்துவரும் பேரையும் பெருமையையும் தொடர்ந்து காப்பாற்றிக்கொள்ள முடியாமல் போய்விடக்கூடுமோ என்ற அச்சம் மற்றொரு காரணம்.

மேலும், 'இந்தப் புதிய முறையை, யாரும் குறைசொலல் முடியாத அளவுக்குச் செயல்படுத்த முடியுமா' என்ற ஐயப்பாடும் கல்லூரி முதல்வர்களிடையே நிலவுகிறது.

இதனால், 'கல்லூரி முதல்வர்கட்கு இருந்துவந்த தொல்லை வேண்டுமானால் நீங்கும் என்றாலும், அதே தொல்லை, மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவின் உறுப்பினர்கட்கு ஏற்பட்டே தீரும்' என்று கல்லூரிகள் தரப்பிலிருந்து கூறப்படுகிறது.

எனினும், பெற்றோர்களும் மாணவர்களும் இந்தப் புதிய திட்டத்தை வரவேற்கவே செய்கின்றனர்.

மாணவர்கள் ஒவ்வொரு கல்லூரிக்கும் விண்ணப்பம் அனுப்பிப் பதிவு செய்து கொள்ளுவதற்கான பணச் செலவை இந்தப் புதிய முறை மூலம் தவீர்க்க முடியும்.

விண்ணப்பதாரர்கட்கு நேர்மையான முறையில் இடம் கிடைக்கக்கூடிய வகையில் பல்கலைக் கழகம் நன்கு ஆரால்ந்து திட்டம் வகுக்கும் என்று கூறப்படுகிறது.

காங்கிரசுக் குண்டர்களின் மிருகச் செயல்

தந்தையையும் மகளையும் தாக்கிய அக்கிரமம்

மணவாளக்குறிச்சி, டிச. 19—

நாகர்கோவில் தொகுதியில், கூட்டணிக் கட்சிகளுக்கு ஆதரவாகக் கொடிகட்டியதால், தந்தையும் மகளும் தாக்கப்பட்டார்கள். இது சம்பந்தமாக காங்கிரசுக்காரர்கள்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

குமரி மாவட்டம் இராமனாபுரம் எனும் ஊரைச் சேர்ந்த முத்தையா என்பவர் தம் வீட்டின்முன் கூட்டணிக் கட்சிகளின் கொடிகளைக் கட்டியிருந்தார்; அதே ஊரைச் சேர்ந்த காங்கிரசுக்காரர்கள் இதை எதிர்த்தார்கள்.

சிவலிங்கம், தங்கப்பன், செல்லையா ஆகியோர் முத்தையாவிடம் சென்று கூட்டணிக் கொடியை இறக்கும்படி கூறினர்; அதற்கு முத்தையா மறுத்துவிட்டார்.

ஆத்திரமடைந்த தங்கப்பன், முத்தையாவை உதைத்தாராம்; இதைப் பார்த்துக்கொண்டிருந்த முத்தையாவின் 14 வயதுடைய மகள் இராதாபாய் ஓடிச் சென்று தடுக்க முயன்றபோது, அப்பெண் மணியைக் குப்புறத்தள்ளி மிதித்தார்களாம்.

இதுபற்றி மணவாளக் குறிச்சி போலீசு அதிகாரியிடம் புகார் செய்யப்பட்டது.

காயமடைந்த தந்தையும் மகளும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இது சம்பந்தமாக வழக்குப் பதிவு செய்து புலன் விசாரணை நடைபெற்று வருகிறது.

அண்ணா டில்லி செல்கிறார்

ஐந்தாண்டுத் திட்டம் பற்றி திட்டக் குழுவுடன் விவாதிப்பார்

சென்னை, டிச. 21—

தமிழ்நாட்டின் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முதலீடு பற்றி அமைச்சர்கள் மட்டத்தில் திட்டக் குழுவுடன், வரும் சனவரி 2-ம் நாளன்று பேச்சுவார்த்தைகள் நடைபெறும்; இப்பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள முதலமைச்சர் அண்ணா அவர்கள், டெல்லி செல்வதற்குத் திட்டமிட்டிருக்கிறார்.

செஞ்சிலுவைச் சங்கம் முதன்முதல்தோன்றியது தமிழகத்தில்தான்!

அமைதிக் காலத்திலும் அதன்பணி மகத்தானது!

அனைத்திந்திய செஞ்சிலுவை மாநாட்டில் முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, டிச. 20—

"முதன்முதல் உலகில் செஞ்சிலுவைச் சங்கம் அமைந்தது தமிழ்நாட்டில்தான்; பாரதப் போரில் தமிழர்கள் யார் கட்சியிலும் சேரவில்லை. போர்க்களத்தில் இரு தரப்பினருக்கும் உணவு அளிக்கும் பொறுப்பை தமிழர்கள் ஏற்றார்கள்; எனவே, அதிகாரபூர்வமல்லாத முதல் செஞ்சிலுவைச் சங்கம், தமிழ்நாட்டில்தான் அமைக்கப்பட்டது எனலாம்.

"அத்தகைய தமிழகத்தில் செஞ்சிலுவைச் சங்கம் வளர்ந்து, இந்த மாநிலமே தலையாய மாநிலமாக விளங்கிட வேண்டுமென விரும்புகிறேன்.

"இந்த மாநாடு தமிழ்நாட்டில் நடைபெறுவது மெத்தப் பொருத்தமானதாகும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், நேற்று இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற செஞ்சிலுவைச் சங்கம்—செயின்ட் ஜான் ஆம்புலன்சு படை ஆகிய இரு அமைப்புகளின் அனைத்திந்திய மாநாட்டில் உரையாற்றுகையில், பெருமிதமுடன் குறிப்பிட்டார்.

தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங், மாநாட்டினைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மக்களிடம் பணியாற்றுவதற்கு நல்ல வாய்ப்புள்ளவைகளாக இந்த அமைப்புகள் விளங்குகின்றன; இந்த அமைப்புகள் குடும்பக் கட்டுப்பாட்டினை மக்கள் ஏற்பதற்காகத் தொண்டு செய்ய வேண்டும்; அதற்கேற்ப தங்கள் நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும்."

மாநாட்டுக்குத் தலைமைதாங்கிய சர்தாரிணி உஜ்ஜல் சிங் பேசுகையில், தமிழ்நாட்டில் செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி விளக்கினார்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள் சிறப்புரை ஆற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"செஞ்சிலுவைச் சங்கத்தின் தேவை உலகறிந்தது. உலகில் எங்கு சிக்கல் நேர்ந்தாலும்—பூசல் விழுந்தாலும், செஞ்சிலுவைச் சங்கத்தார் ஓடிவந்து பணியாற்றுவார்கள்.

உலக நாடுகள் மத்தியில் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு, உரிய இடம் கிடைத்திருக்கிறது

போர்க் காலத்தில் மட்டுமின்றி சமாதானக் காலத்திலும் செஞ்சிலுவைச் சங்கம் ஆற்றிட வேண்டிய பணி நிரம்ப உள்ளது. இந்த இரு நேரங்களிலும் பணியாற்றுவதில் பல சங்கடங்கள் உண்டு.

வறட்சி, பஞ்சம், வெள்ளம், தீ விபத்து போன்றவைகள் எழுகின்ற நேரத்தில் செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிதேவைப் படுகிறது.

எனவே, அச்சங்கம் சேவை புரியத் தமிழக அரசு தனது முழு ஒத்துழைப்பையும் தந்திடும் எனக் கூறிக்கொள்கிறேன்."

'மாணவர் நற்பணிப்படை'

கல்வித் துறை இயக்குநர் யோசனை

கோவை, டிச. 19—

"மாணவர்கள் சிலர் தவறாக நடந்துகொள்ளும்போது, அதை எதிர்த்து நிற்கும் அளவில் 'மாணவர் நற்பணிப் படை' ஒன்றை ஒவ்வொரு கல்வி நிலையங்களிலும் ஏற்படுத்தலாம்"

என்று கல்வித் துறை இயக்குநர் திரு. எம். டி. பால் யோசனை கூறினார்.

"இப்படி ஏதாவது நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், பொது மக்களுக்கு மாணவர்களிடமுள்ள மதிப்புப் போய்விடும்; அதுமட்டுமன்று; மாணவர்கள் என்றாலே அவர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுவிடும்" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மாணவர்கள் முறை தவறி நடந்து கொண்டுள்ள சில நிகழ்ச்சிகளை அவர் சுட்டிக்காட்டி, 'மாணவர்கள் தற்போது நடந்து கொள்ளும் முறை தவிர்க்க முடியாதது என எண்ணி வாளாவிருந்துவிடுவதா? அல்லது, கல்வி நிலையங்களை மூடிவிடுவதன்மூலம் இந்த நிலைமையைச் சமாளிப்பதா?' என அவர் வினவினார்.

"நாட்டில் கல்விக்காக ஆண்டு தோறும் அரசிராலும், பொது மக்களாலும் ரூ. 56-கோடிக்கு மேல் செலவிடப்படுகிறது; இதனால் பலனடைபவர்கள் (மாணவர்கள்) நல்லபடி நடந்து கொள்ள வேண்டுமென எதிர்பார்ப்பது இயல்பேயாகும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழகத்திற்கு இரண்டாவது இடம்

சிறுதொழில் வளர்ச்சியில் காட்டும் அக்கறை

புதுடில்லி, டிச. 20—

சிறுதொழில்கள் நிறுவ அரசாங்க பாங்கியிடமிருந்து நிதி யுதவி பெறும் மாநிலங்களில் தமிழகம் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது; முதலிடத்தை மகாராட்டிரம் பெற்றிருக்கிறது.

1968 மார்ச் முடிய தமிழகத்தில் 1,860 சிறு தொழில் நிலையங்கள் நிறுவுவதற்கு ரூ. 13.45 கோடி பெறப்பட்டிருக்கிறது.

516 சிறுதொழில் நிலையங்களுக்காக மைசூர் ரூ. 2.77 கோடியும்; 261 தொழில் நிலையங்களுக்காகக் கேரளம் ரூ. 2.51 கோடியும்; 2,250 தொழில் நிலையங்களுக்காக ஆந்திரம் ரூ. 7.88 கோடியும் பெற்றிருக்கின்றன.

புற்று நோய் மருத்துவமனைக்கு நார்வே வழங்கும் உதவி

ஜினிவா, டிச. 20—

காஞ்சிபுரத்தில் புற்று நோய்ச் சிகிச்சை நிலையமொன்றை நிறுவ நார்வே சுமார் ரூ. 10½-இலட்சம் வழங்கியுள்ளது; இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

ஜினிவாவில் உள்ள உலக சுகாதார நிறுவனத்தின்மூலம் இப்பணம் வழங்கப்படும்.

இந்தியாவில் புற்று நோய்ச் சிகிச்சை பிரச்சினை ஏற்கனவே பெரும் அளவில் தோன்றியுள்ளது என்றும், அடுத்த 10-ஆண்டுகளில் இதைத் துரிதமாகத் தீர்க்கும் அவசியம் நேரிடலாமென்றும் உலக சுகாதார நிறுவன அதிகாரி ஒருவர் கூறினார்.

காஞ்சியில் ஏற்படவிருக்கும் சிகிச்சை நிலையத்திற்கு மத்திய அரசு தேவையான ஊழியர்களையும், மருத்துவர்களையும், சாதனங்களையும் அளிக்கக்கூடும்.

தேசிய ஒருமைப்பாட்டை குலைக்கும் இந்திப் படங்கள்!

திரைப்பட முதலாளிகள் கைக்குள் தணிக்கைக் குழுவினர்

நாடாளுமன்ற மேலவையில் குற்றச்சாட்டுகள்

புதுடில்லி, டிச. 19—

"சில இந்தித் திரைப் படங்கள், தேசிய ஒருமைப்பாட்டுக்கு இடையூறாகவும், மரபுவழி மதிப்பைக் குறைப்பதாகவும் இருக்கின்றன; திரையிடப்படுவதற்கு இவைகள் ஏன் அனுமதிக்கப்பட்டன?"

என்று நாடாளுமன்ற மேலவையில் உறுப்பினர்கள் பலர் வினவினர்.

"திரையிடப்படுவதற்குத் தகுதியற்ற படங்களுக்கு ஒப்புதல் பெற்றுத் தரத் தணிக்கையாளர்களுக்குத் தகவல்—ஒலிபரப்பு அமைச்சுத் துறை அதிகாரிகள் உடந்தையாக இருக்கின்றனர்.

"திரைப்படத் தணிக்கைக் குழு உறுப்பினர்களைப் படத் தயாரிப்பாளர்கள் தங்கள் கைக்குள் போட்டுக் கொண்டிருக்கின்றனர்"

என்றும் உறுப்பினர்கள் பலர் குற்றஞ்சாட்டினர். இதற்குப் பதிலளிக்கும் வகையில், ஒலிபரப்புத் துறை அமைச்சர் கே. கே. ஷா கூறியதாவது:—

"வெறும் யூகங்கள் தேவையில்லை; தணிக்கைக் குழு உறுப்பினர்கள் கண்ணியமானவர்கள்; அவர்கள்மீது புகார்களைக் கூறுவது விரும்பத்தக்கதல்ல; திட்டவட்டமாக ஆதாரம் காட்டினால், கூறப்படும் புகார்கள் குறித்து ஆராய்வதற்குத் தயார்."

விண்வெளிக்குச் செல்லும் அமெரிக்க விமானிகள்

தொடர்ந்து வானொலி தொடர்புகொள்ள ஏற்பாடு

'அப்பாலோ-8' விண்வெளி விமானிகள், இத்திங்களில் சந்திரனை வட்டமிடப்போகின்றனர்.

விண்வெளியில் பூமியை வட்டமிடுவதைவிடச் சந்திரனை வட்டமிடுவதில் ஆபத்து மிகமிக அதிகம்.

ஆயினும், எந்த நெருக்கடியிலும்—எந்த அவசரத்திலும் விண்வெளி விமானிகள் நிலைமையைச் சமாளிப்பதற்கு வகை செய்யும் பலப்பல பாதுகாப்புக்கள் சந்திரப் பயணத்திலே உள்ளன.

'அப்பாலோ' விண்வெளிக் கப்பல் செல்லும் பாதையே, தாராளமாகத் திரும்பிவிடக்கூடிய பாதையாக இருக்கும்; இதன் பொருள் என்னவென்றால், அதன் போக்கிலே விட்டுவிட்டால் விண்வெளிக் கப்பல் சந்திரனை வட்டமிட்டு விட்டு பூமிக்குத் திரும்பிவிடும்.

சந்திரனைச் சுற்றியுள்ள பாதையில் இருக்கையில்தான், அப்பாதையிலிருந்து தங்களை வெளியேற்றிக்கொள்ள விண்வெளி விமானிகள் தம் முக்கிய எஞ்சினை நம்பியிருக்க வேண்டியிருக்கும்; மற்றபடி விண்வெளியிலே திசை தவறித் திண்டாடும் என்ற ஆபத்து அறவே இல்லை.

இந்த விண்வெளிக் கப்பலில் உள்ள மிக முக்கிய அமைப்புக்கள் எல்லாம் மிகையானவை; இதன் பொருள் என்ன?—ஓர் அமைப்பு இயங்கத் தவறும்பட்சத்தில், அதன் பணியை வேறு அமைப்பு ஒன்று செய்துவிடும்.

சந்திரனை வட்டமிட்டு வரும் விண்வெளிப் பயணத்திற்கு இருக்கும் ஒரே ஒரு ஆபத்து, பயணத்துக்கு ஆகும் நேரம்தான்; இதுதான் பெரிய ஆபத்தும்கூட; அவசரத்தில் பூமிக்குத் திரும்பிவிட அதிக நேரம் தேவையாக இருக்கிறது.

சந்திரனை அப்பாலோ-8 விண்வெளி விமானிகள் வட்டமிடுகையில், அவர்கள், பூமியிலிருந்து இரண்டு இலட்சத்துககு அதிகமான மைலுக்கப்பால் இருப்பர்.

பூமியைச் சுற்றி இதுவரை நிகழ்ந்துள்ள விண்வெளிப் பயணங்களிலே உடனடியாக பூமிக்குத் திரும்விட வேண்டிய நெருக்கடி ஏற்பட்டிருந்தால் அரை மணி நேரத்திலிருந்து மூன்று மணி நேரத்துக்குள் திரும்பி வருவது இயலக்கூடியதாகவே இருந்தது. இறங்கவேண்டிய இடத்தை முன்கூட்டியே தெரிந்து எடுத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பு மட்டும் இருந்திருக்காது என்ற ஒரு குறைதான்; மாறாக, பூமியிலிருந்து அப்பாலோ-8 விண்வெளி விமானிகள் வெகு தொலைவில் போய்விடுவதால், பூமிக்குத் திரும்பி வர அவர்களுக்கு இரண்டு நாட்களுக்குமேல் பிடிக்கும்.

சந்திரனை நோக்கிச் செல்கையில், பயணத்தின் பெரும்பாலான கட்டங்களிலே—தேவைப்பட்டால்—விமானிகள் கப்பலைத் திருப்பி முக்கிய எஞ்சினை இயக்கி, பூமிக்குத் திருப்பி விடலாம். அப்பொழுது அவர்கள் பூமிக்குத் திரும்பி வருவதற்கு ஆகும் நேரம், அவர்கள் கப்பலைத் திருப்புகையில் பூமியிலிருந்து எவ்வளவு தொலைவில் இருந்தனர் என்பதைப் பொறுத்திருக்கும்.

இடையறா வானொலித் தொடர்பு

அப்பாலோ-8 விண்வெளி விமானிகள் அம்புலிக்குச் செல்லுகையிலும் திரும்பி வருகையிலும் அவர்களுடன் வானொலித் தொடர்பு இடையறாமல் இருந்து வரும். இது, விண்வெளிக்கோள் பூமியைச் சுற்றும் பயணத்தில் கிடைத்த அனுபவத்துக்கு நேர் மாறாகும்.

பூமியைச் சுற்றும் பயணத்திலே விண்வெளிக் கப்பலுடன், ஒன்றரை மணி நேரப் பயணத்தில் ஒரு மணி நேரம், தொடர்பு அற்றுப்போகும் அனுபவம் ஏற்பட்டுள்ளது. எந்தத் தரை நிலையங்களுக்கும் வெகு தொலைவில் இருக்கும் பகுதிகளுக்கு மேலாகக் கடந்து செல்கையில் இது ஏற்படுகிறது.

தரையிலிருந்து விண்வெளியில் இருக்கும் கப்பலுடன் வானொலித் தொடர்பு இருந்துவர, கப்பலும் தரை நிலையமும் ஒரே பார்வைக் கோட்டில் இருக்கவேண்டும். ஒரு நிலையத்தின் பார்வையிலிருந்து கோள் மறைந்துவிட்டால், தொடர்புகொள்வது இயலாது.

சந்திரனை வட்டமிட்டு வரப்போகும் அப்பாலோ-8, பூமியிலிருந்து 4,000 மைலுக்கப்பால் சென்றுவிட்டால் அது, பூமியின் பெரும் பகுதியினுடைய பார்வையில் இருந்துவரும்; எனவே, எந்த ஒரு நிலையத்தின் பார்வைக் கோட்டிலும் அது எப்பொழுதும் இருந்து வரும்.

4,000 மைல் உயரத்தை விண்வெளியில் செலுத்தப்பெற்று ஒரு சில நிமிடங்களில் அந்தக் கோள் அடைந்துவிடும்.

ஆயினும், அப்பாலோ-8 ஒவ்வொரு தடவையிலும் சந்திரனைச் சுற்றி வருகையில் தொடர்பு அற்றுப்போகும் நிலை ஏற்படும். இது, சந்திரனின் பின்புறத்திற்குக் கோளின் விண்வெளிப் பாதை செல்லும்போது நிகழும்.

சந்திரனை ஒரு தடவை வட்டமிட 2-மணி நேரம் பிடிக்கும்; அதில் 45-நிமிடம் இந்தத் தொடர்பு 'இருட்டடிப்பு' நிகழும்; ஏனெனில், அப்பொழுது சந்திரன் விண்வெளிக் கப்பலுக்கும்—பூமிக்குமிடையில் இருந்துவரும்; எனவே தற்காலிகமாகக் கோள், பூமியிலுள்ள தரை நிலையங்களின் பார்வைக் கோட்டிலிருந்து மறைக்கப்பட்டிருக்கும்.

இந்தியாவுக்கு மற்றொரு அமெரிக்க உதவி

ரூ. 298.50 கோடி கிடைக்கும்

புதுடில்லி, டிச. 20—

அடுத்த சில நாட்களுக்குள், மொத்தம் ரூ. 298.50 கோடி அளவுக்கு மூன்று உதவி ஒப்பந்தங்களில், இந்தியாவும்—அமெரிக்காவும் கையெழுத்திடும்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்த நிதி, பெரும் அளவுக்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்கத் தூதர் செஸ்டர் போல்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இத்தகவல் தரப்பட்டிருக்கிறது.

ஆபத்தைச் சமாளிக்க நவீன ஆயுதங்கள்

புதுடில்லி, டிச. 20—

"செஞ்சீனா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளிடமிருந்தும் வரக்கூடிய எந்த மிரட்டலையும் சமாளிக்கும் வகையில் இந்தியப் படைகள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன.

"நாட்டின் பாதுகாப்புக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களைச் சமாளிக்கும் வகையில் இந்தியப் படைகளுக்குப் படிப்படியாக நவீன ஆயுதங்கள் தரப்பட்டு வருகின்றன"

என்று நாடாளுமன்ற மேலவையில், தற்காப்புத் துறை அமைச்சர் சுவரண்சிங் தெரிவித்தார்.

சேலம் உருக்காலை

நிலம்கையகப்படுத்தும் வேலை தொடரும்

சேலம், டிச. 20—

"சேலம் உருக்காலை அமைப்பதற்காக நிலத்தைக்கையகப் படுத்தும் நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுத்துவரும்"

என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கே. வெங்கடேசன் தெரிவித்துள்ளார்.

"நிலத்தைக்கையகப்படுத்தும் சட்டத்தின்கீழ், கஞ்சமலைக்கு அருகில் ஏலம்பள்ளி கிராமத்தில், 25,000 ஏக்கர் நிலத்தைக்கையகப் படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது" என 1963—64-ம் ஆண்டிலேயே அவர் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தோற்ற காங்கிரசுக்காரருக்குப் பதவி கொடுத்ததுதான் மிச்சம்!

குறிக்கோள் எதுவும் நிறைவேறக் காணோம்!

சென்னையிலிருந்த தலைமையகம் டெல்லிக்கு மாற்றப்பட்டதேன்?

உணவுக் கார்ப்பரேஷன் நிர்வாகம் பற்றி நாடாளுமன்றத்தில் கந்தப்பன் குற்றச்சாட்டு

புதுடில்லி, டிச. 17—

"தேர்தலில் தோற்ற காங்கிரசுக்காரருக்குப் பெரிய பதவி கொடுக்கத்தான் உணவுக் கார்ப்பரேஷன் பயன்பட்டிருக்கிறதே தவிர, உண்மையில் அது எந்தக் குறிக் கோளுக்காக நிறுவப்பட்டதோ அந்தக் குறிக்கோளே நிறைவேற்ற முடியவில்லே — அதில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் தக்க பாதுகாப்பு இல்லே" என்பதை, நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் செ. கந்தப்பன் சுட்டிக்காட்டிக் கண்டித்தார்.

உணவுக் கார்ப்பரேஷன் பற்றிய திருத்த மசோதா, 9—12—68 அன்று நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வந்தபோது அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:—

"மத்திய உணவு (கார்ப்பரேஷன்) நிறுவனமானது 1965 வாக்கில் தான் தொடங்கப்பட்டது. இந்த மூன்று ஆண்டுகாலத்துக்குள் -- மதிப்புக்குரிய மோரோ பிரபு குறிப்பிட்டதுபோல் -- ஊழல்கள் பல கிளம்புள்ளன. இதன் அலுவலகம் இருக்கவேண்டிய இடம் சம்பந்தப்பட்ட வரியில் லும், ஊழல் போக்கே காணப்படுகிறது.

இதுபோன்ற மசோதா ஒன்று கொண்டுவந்து அதைச் சட்டப் புத்தகத்தில் இடம் பெறச் செய்வதற்கு முன்னால், அதன மேலே முறைகேடுப் பற்றியும், அதன் தலேமை அலுவலகத்தை எங்கே அமைப்பது என்பது பற்றியும், மற்ற அம்சங்கள் பற்றியும் ஆராய வேண்டியதே முறை யாகும்.

இது தொடர்பான சட்டத்தின் 4-(1) பிரிவுப்படி இந்த உணவு நிறுவனத்தின் தலேமை அலுவலகம் சென்னியில் அமைய வேண்டியதாகும்; ஆனல் இந்த அலுவலசமும், இது தொடர்பான எல்லா அலுவல்களும் டில்லிக்கு மாற்றப்பட்டுவிட்டன. கடந்த சில மாதங்களாக டில்லியிலி ருந்தேஇந்த அலுவலகம் செயல் படுகிறது.

இப்படி ஏன் மாற்றவேண்டும்? இந்தப் பிரச்சினே எழுந்தபோது, தலேமை அலுவலகத்தைத் டில்லிக்கு மாற்றுவதை இந்த அவை யிலேயே நாங்கள் எதிர்த்துள் ளோம்.

உணவு நிறுவனத்தின் தலேமை அலுவலகத்தை டில்லிக்கு மாற் றுவது பற்றிய இறுதி முடிவு செய்யப்படவில்லே. இதன் தலேவ ரான சாண்டி, 'அப்படி யேசாதா தான் கூறுகிறார்' என்று அப் போது அரசுத் தரப்பில் சமா தானம் கூறப்பட்டது.

அப்படிச் சொல்லிக்கொண்டே சென்னையிலிருந்து டில்லிக்குத் தலேமை அலுவலகத்தை மாற்றி விட்டார்கள். இதுபற்றி விதிப் படி வெளியிடவேண்டிய அறி சிப்பு அறிக்கைகூட வெளியிடப் படாதது தெரியவில்லே. இந்த வகையில் -- எங்கள் நம்பிக்கைக் குரிய வகையில் செல்ல ஈடை பெறவில்லே. மாலே அரசின் நம்பிக்கையேனும் உள்ளதா எனப்து ஐயமே!

சென்னியில் செயல்பட்டுவந்த இந்தத் தலேமை அலுவலகத்தை இவ்வளவு விரைந்து ஏன் வேறோரிடத்துக்கு மாற்ற வேண் டும்? சென்னியில் இது செயல் பட்டதால் ஏற்பட்ட குறை பாடும் இடையூறும் என்ன? இந்த அலுவலகம் நிறுவப்பட்டு மூன்று ஆண்டுகள்தானே ஆகி யுள்ளன?

இதுபோன்ற முக்கியப் பிரச்சினே களில் இங்கு அரசு ஏன் இப்படி அசட்டையான போக்கில் நடந்துகொள்கிறது?

சென்னியில் தலேமை அலுவல கம் நிறுவும் பிரச்சினே தொடக் கத்தில் சிலரால் எதிர்க்கப்பட்ட போது, அப்போதைய உணவு அமைச்சரே தக்க காரணங்கள் கூறிச் சென்னியில் இதனே நிறு வச் செய்தார்.

'அரசு' என்பது, 'ஒரு நிரந்தர நடைமுறை' என்பதே என் எண் ணமாகும். அமைச்சர்கள் போகலாம் -- வரலாம்; ஆனல் இங்கு --- நாங்கள் விட்டுவைத் திருக்கும் வரை --- காங்கிரசு ஆண்டுகொண்டே இருக்கிறது! அமைச்சர் மாறுமபோதெல்ல லாம் காங்கிரசின் கொள்கை யும் மாறிவிடும் என்று நான் எண்ணவில்லே!

எனவே, இவ்வளவு குறுகிய காலத்துக்குள்சென்னியிலிருந்து இந்தத் தலேமை அலுவலம் ஏன் மாற்றப்பட்டது என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

அமைச்சர் மாறும்போது அரசுக் கொள்கையும் மாறுகின்றதா? அல்லது அப்படியான சிக்க லிலேயே இந்த விஷயத்தில் இந்த அரசு நடக்கின்றதா? அல்லது, இந்த விவகாரமே புரி யாத தடுமாற்றத்துடன் இந்த அரசு செயல்படுகிறது என்று அஞ்ச வேண்டி உள்ளதா?

இந்த (அரசுத் துறை) உணவு நிறுவனமானது திட்டவட்ட மான செயல முறைகளோடு கடமையாற்ற வேண்டியதாகும். ஆனல், 'இதில் விவாதத்துக் குரிய சிக்கல் ஏதும் இல்லே' என்று அமைச்சர் கூறுகிறர்.

இந்த நிறுவனத்தில் பணியாற் றும் ஊழியர்கள் தொடர்பாக இந்த நிறுவன அறிக்கையின முதல் பாராவில் குறிப்பிடப்பட் டுள்ளதை நீங்களுடற்த விரும்பு கின்றேன் :—

"மாற்றங்கள் காரணமாக இந்த நிறுவனத்தின் ஊழியர் கள் சம்பளம், ஒய்வுகால ஊதி யம், அலுவல நிலேமை ஆகி யவை பாதிக்கப் படாமல் இயன்ற வரையில் பார்த்துக் கொள்ளப்படும்"

என்று அதில் கூறப்பட்டுள்ளது இந்த விதிப்படி 'இயன்ற வரை யில்' என்ற வாசகமே இதில் உள்ள குழப்பத்தை எடுத்துக் காட்டுகிறது. அண்மை நாட்க ளாக எங்களிடம் இதற்கிறி வருகிற முறையிடுகள், இந்தக் குழப்பத்திற்குப் போதிய எடுத் துக்காட்டுகளாகும்.....

அனுகு சாகிப் (இடைமறித்து):—"இந்த விஷயத்தில் ஊழியர்கள் தங்கள் விருப்பப்படி செயல்பட சட்டத்தில் வகை செய்யப்பட் டுள்ளது. குறிப்பிட்ட ஊழியர் ஒருவர் ஒய்வுகாலச் சம்பளம், ஒய்வுகாலச் சலுகைகள் சம்ப தமாகத் தம விருப்பப்படி தேலேயானதை எடுத்துக் கொள்ளலாம் என்பது விதி. இந்த விதியை ஊழியர் கடை பிடிக்கலாம்."

செ. கந்தப்பன் :—"இந்த மசோ தாவைப் பலமுறை படித்துப் பார்த்துவிட்டேன்; இதன் அடிப் படையை ஆய்ந்து நோக்கும் போது, இதில்உள்ள கோளாறு நன்கு தெரிகிறது. மசோதா சட்டமாவதற்கு முன்னதே ஊழி யர்களிடமிருந்து முறையிடுகள் வரத் தொடங்கிவிட்டன.

இதோ—தஞ்சையிலிருந்து ஒரு புகார்த் தந்தி வந்துள்ளது; தஞ் சையில் இந்த உணவு நிறுவனத் தைச் சேர்ந்த ஊழியர்கள் பணி யாற்றுகிறார்கள். அங்கிருந்து இந்தப் புகார் வந்துள்ளது.

நான்காம் வகுப்பு ஊழியர்கள் 24 பேர்களே—ஒரண்டுக் காலம் இந்த நிறுவனத்தில் பணிபுரிந்த வர்கள்—இப்போது மேல்நீக்கம் செய்யப் படி உத்தரவிட்டுள்ள தாம்; தாந்தியில் இந்தச் செய்தி உள்ளது; இது எனக்கு வந்த தந்தி.

மசோதா வருமுன்னரே இந்த நிலேயென்றல், மசோதா சட்ட மாகிவிட்டால் எவ்வளவு போர் மேலே இழப்பார்களோ!

இந்த உணவு நிறுவனத்தோடு மத்திய உணவுத் துறையில் இங்குப் பிரிவில் உள்ள 18,000 ஊழியர்கள் சேர்த்துக்கொள்ள ளப்படவிருக்கிறார்கள். இந்த நிறுவனத்திலேயே ஏற்கனவே மூவாயிரம் பேர் உள்ளனர்.

இந்த நிறுவனத்துக்கெனத் தனி ஊழியர் பிரிவுகளும், சட்ட விதி முறைகளும் உள்ளன.

இந்த மசோதாவின்படி பார்த் தால், இந்த நிறுவன ஊழியர் கள் தொடர்பான எல்லா விஷ யங்களேயும் தொழிற் சட்டத் தின்கீழ் கொண்டுவரப் போகி றர்கள்.

இந்த உணவு நிறுவனமானது ஓர் ஏகதேசமான அமைப பாகவே செயல்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது; 'நிற மைக்கு இங்கே இடம் உண்டு' என்று கருதினர் பலர்; தங்கள் நல்ல அலுவல்களே விட்டுவிட்டு இந்த நிறுவனத்தில், திறமை மூலம் வந்து சேர்ந்தனர்.

இந்த உணவு நிறுவனத்தில் (கார்ப்பரேஷன்) பட்டதாரிகள் பலர் உள்ளனர். இந்த நிலே யில், இது மத்திய உணவுத் துறையோடு சேர்க்கப்பட்டு, அங்குள்ள 18,000 ஊழியர் களின சீனியாரிட்டி அடிப்படை செயல்படுத்தப்படுமானல், இந்த நிறுவனத்தில் உள்ள ஊழியர் களே மேலே நிக்கத்துக்கு உள்ளா கலாம்; மேலே உயரு கிடைக் கும் வாய்ப்பை இழக்கலாம்; இந்த மசோதா காரணமாக உணவு நிறுவனத்தின் எதிர் காலம நல்லதாக இராது என் பது உறுதி.

இந்த மசோதா வாசிப்பை இந்த அவையில் கேட்ட போது, 'உணவு நிறுவனத்தையே எடுத்துவிடப் போகிறர்களோ?' என நானுகன் எண்ணினேன்.

பிள்ளர், மத்திய உணவுத் துறை யில் உள்ளவர்களே இந்த உணவு நிறுவனத்தோடு சேர்த்துக் கொள்ளப் போவதாகத் தெரி விக்கப்பட்டது; இப்போதோ, இந்த நிறுவனத்திலிருந்து மேலும் சிலரை மேல்நீக்கம் செய்ய போகிறர்கள்! பலர் மேல் நீக்க மும் செய்யப்படும் நிலேமையில் இருக்கிறர்கள்!

இங்கு ஏற்கனவே பணியாற்றும் ஊழியர்களுக்குப் போதிய பாது காப்பு இல்லே; இது முக்கிய மான விஷயம். அமைச்சர் தம் பதிலில் இது குறித்து உறுதி யளித்தால் வேண்டும். இந்த நிறுவன ஊழியர்களின் அச்சத் தைப் போக்கவேண்டும்.

மற்றொரு விஷயம என்னவென் ருல், இந்த உணவு நிறுவனத் தில் பணியாற்றும ஊழியர் களில் 60—70 சதவிகிதம் பேர் தற்காலிக ஊழியர்களாகவே பணியாற்றுகிறர்கள். அவர் களின் எதிர்காலம் என்னு குமோ!

இந்த நிறுவன ஊழியர்களின் பல பிரிவுகள் சருக்குப்படவிருக் கின்றனவாம். அவ்வாறு சுருக் கப்பட்டால், எத்தனேப் பேர் வேலே இழப்பார்களோ! இது ஆபத்தான பிரச்சினே! அமைச் சர் இதற்குத் தக்க விளக்க மளிக்க வேண்டும -- ஊழியர் களின் அச்சத்தைப் போக்க வேண்டும்!

இந்த உணவு நிறுவனம் தொடர் பான முந்திய மசோதாவில் இது பற்றிக் குறிப்பிடும்போது, 'இந்த நிறுவனம் வர்த்தக அடிப்படை யில் செயல்படும்; மார்க்கெட் டில ஏகபோக முதலாளி களோடு போட்டியிட்டு உண வுப் பொருள்களின் விலே ஏறுப படி தடுக்கும்; பதுக்கலேத் தடுக் கும்' என்றெல்லாம் கூறப்பட் டது; ஆனல், அரசு அவ்வாறு நடந்துகொள்ளவில்லே என்பது, கடந்தகால நிகழ்ச்சிகள் மூலம் தெரிகிறது.

ஏகபோக ஆதிக்கத்தால் விலே கள் ஏறுமல தடுக்கவும் ஊழல் களேத் தவிர்க்கவும், மக்கள் நன்மை பெறவும் இதுபோன்ற நிறுவனங்கள் அவசிய மானவை; ஆனல் பெரும் பாலான இடங்களில், இந்த நிறு வனம் சரியானபடி செயல்பட வில்லே.

இந்த நிறுவனத்தின் உயர்நில அதிகாரி நியமனம் சம்பந்தப் பட்ட வரையிலும், இந்த அரசு சரியானபடி நடந்துகொள்ள வில்லே. இதன் தலேவராகப் பாய் என்பவரை முதலில் நியமித்தார் கள்; அவர் நன்றாகப் பணியாற் றினர்; ஆனல், அவரது வேலே இந்த அரசாங்கத்துக்கே, அமைச்சருக்கோ பிடிக்கவில்லே போலும் -- அவர் பதவி விலகி விட்டார்! அதன்பிறகு பாரோ வந்தார்!

தற்போது இதன் தலேவராக இருக்கும் ஷா நவாஸ்கான் என்ப வர், தேர்தலில் தோல்வி கண்ட ஒரு காங்கிரசுக்காரர்!

இப்படித் தோல்வி கண்டவர் களுக்குப் பதவி கொடுக்கும் முறை காங்கிரசு ஸையாளும் ஒரு மகத்தான முறை.....

எஸ். என். கிருஷ்ணன் :—"தோல்வியடைந்தவர்களுக்கு வேறு வழிதான என்ன?"

செ. கந்தப்பன் :—"அப்படிப் பட்டவர்களுக்குப் பதவி கொடுக்க வேண்டாமா என, அரசு வேறு ஏதாவது பதவி கொடுக்கட்டுமே! இதுபோன்ற முக்கிய இடத்திலா கொண்டு போய் வைப்பது? தனிப்பட்ட முறையில் மன வேறுபாடு எனக் குக் கிடையாது.

அனேத்திந்திய அடிப்படையில் செயல்படும் ஒரு நிறுவனத்திற்கு நாட்டில் உள்ள பெரிய வர்த்த கர்களோடு போட்டியிட்டுச் செயல்படவேண்டியதொரு நிறு வனத்துக்கு—இப்படி, தோல்வி கண்ட ஒருவரைத்தான் தலேவ ராக நியமிக்க வேண்டுமா? தகுதியான ஒருவரை இதில் நிய மிக்கலாகாது கண்டனத்துக்குரிய தாகும்.

இந்த நிறுவனம் தொடர்பாக இந்த அரசு போதிய அக்கறை காட்டவே இல்லே. இந்த நிறு வனத்தின் மூலம், தோல்வி யடைந்த காங்கிரசுக்காரர்களுக் குப் பதவி கொடுக்க மட்டுமே அவர்கள் விரைக்கிறர்கள்!

இந்த நிறுவனம் சம்பந்தப்பட்ட வரையிலாவது காங்கிரசு ஆட்சி யாளர்கள் இந்தப் போக்கை விட்டொழிக்கவேண்டும் - தக்க வர்கள் நியமிக்கவேண்டும்.

அமைச்சர் அவர்கள் எல்லா வற்றையும் கண்டு ஆய்ந்து, இந்த உணவு நிறுவனத்தின் ஊழியர்களின் அச்சத்தையும், மத்திய உணவுத் துறையில் இந்தப் பிரிவில் உள்ளவர் களின் அச்சத்தையும் போக்க வேண்டும்."

திருச்சி கோட்டத்தில் குறை கூறையும் திட்டம்

அதிகாரிகளுடன் கோட்டாட்சித் தலேவர் சுற்றுப்பயணம்

ஆங்காங்கே பொதுமக்கள் குறைகளே முறையிட்டனர்

திருச்சிராப்பள்ளி கோட்டத் தைச் சேர்ந்த அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் மக்களின் குறைகளேக் கேய அலுவலர் களின் நேரடி விசாரணேயும், தீர்வு காணலும் 11—12—68 காலே 9-மணியளவில் திருவரங்கம் சாவடியில், திருச்சி கோட்டாட்சி யாளர் திரு. எஸ். சூரியராரா யணன் தலேமையில் துவக்கிவைக் கப்பட்டது.

அதுபோது, திருவளர்சோலே, பனையபுரம், உத்தமசேரி, கிளிக் கூடு ஊராட்சிகளேச் சேர்ந்த பொதுமக்கள் தங்கள் குறைகளேக் கோட்டாட்சியாளரிடம் தெரிவித் தனர்.

இந்தக் குறைகளே, நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அதிகாரிகள், உடனடியாகக் குறைகளின் பேரில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளுப் பொதுமக்களுக்கு எடுத்துச் சொன் னர்கள்.

மாலே 3 மணியளவில் முத்தர சநல்லூர் ஊராட்சி மன்றத்தில்— கம்பரசம்பேட்டை, முத்தரசநல் லூர், பஞ்ர் ஊராட்சிகளேச் சேர்ந்த பொதுமக்களின் குறைகளே உட னடியாகக் கவனித்து நடவடிக்கை எடுத்துப் பொதுமக்களுக்கு அறி வித்தும், மீதமுள்ள குறைகளே சம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஆவன செய்யப்பட் டது.

★

12—12—68 காலே 9 மணிக்கு அந்தநல்லூர் ஊராட்சி மன்றத் தில்—அல்லூர், திருச்செம்புனூர், அந்தநல்லூர், மேகுடி, பெரிய கருப்பூர் ஊராட்சிகளேச் சேர்ந்த பொதுமக்கள் தங்கள் குறைகளே, கோட்டாட்சியாளரிடம் தெரிவித் தார்கள்.

குறைகள் பெரும்பாலும் காவிரி யில் விடும் தண்ணீர் பற்றுக்குறை பற்றிய நீர்ப்பாசன பிரச்சினை களாகவே இருந்தன.

மக்களின் குறைகளே நிகழ்ச்சி யில் கலந்துகொண்ட அதிகாரிகள் உடனடியாகக் குறைகளின் பேரில் அங்கேயே எடுக்கப்பட்ட நடவடிக் கைகளேப் பொதுமக்களுக்கு எடுத் துச் சொன்னர்கள்.

மாலே 3 மணிக்கு திருப்பராய்த் துறையில் கொடியாலம், திருப் பராய்த்துறை, பெருகமனி ஊராட்சி மன்றங்களேச் சேர்ந்த பகுதி மக்களின் குறைகளேக் கேட் டறிந்து ஆவன செய்தனர்.

★

13—12—68 காலே 9 மணியள வில் சிறுகமனி பேருராட்சி மன் றத்தில்—பேட்டவாய்த்தலே ஊராட்சிகளேச் சேர்ந்த பொது மக்கள், தங்கள் குறைகளே கோட் டாட்சியாளரிடம் நேரடியாகவும் தந்தும், தபால் மூலமும் பெரும் பாலானவை நீர்ப்பாசன தூடுப் பாடு சம்பந்தப்பட்டவாகவே இருந்தன.

அன்று மாலேயில் குமுமனி ஊராட்சி மன்றத்தில் — குமுமனி, கோப்பு, எட்டரை, பேரூர் ஊராட்சிகளே சேர்ந்த மக்களின் குறைகளே கேட்டறிந்து ஆவன செய்யப்பட்டது.

பன்றிகளுக்கு அடிக்கும் யோகம்!

மேற்கு நேர்மலேயில் பன்றி களின் பராமரிப்பில் மிகுந்த கவ னம் செலுத்தப்படுகிறது. வெப்பம் மிகுந்த நாட்களில் பன்றிகளின் உடல்நலம் கெட்டுவிடாதிருக்க அவை வசிக்கும் கொட்டில்களுக்கு 'ஏர்கண்டிஷன்' வசதி செய்து கொடுக்கப்படுகிறது. பன்றிகளின் உடல் குட்டைத் தனிக்க அவற்றை 'ஷவர் பாத்' மூலம் குளிப்பாட்டுகிறர்கள். இப்படி யாக மேற்கு ஜெர்மனியில் உள்ள பண்ணைகளில் பன்றிகளும் சுகவாசி களாகக் காலங்கழிக்கின்றன.

அறிஞர் அண்ணா

சிகிச்சை நிதி

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்காகத் தொகை அனுப்புமாறு கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள் விடுத்த வேண்டு கோளுக்கேற்ப நிதியளித்த தோழர்கள்:—

		ரூ. காசு
20-12-68 இதழ்த் தொடர்ச்சி		1,26,780.02
கோவை பி. எஸ். எஸ். சோமசுந்தரம் செட்டியார்		2,000.00
கோ. சி. மணி எம்.எல்.சி.		150.00
திட்டக்குடி ஏ. கிருஷ்ணசாமி எம்.ஏ.		101.00
வேதாரண்யம் சிவ. கனகசுந்தரம்		100.00
பெண்ணாகரம் டவுன் பஞ்சாயத்துத் தலைவர் ஆர். இராசமாணிக்கம் (எம்.ஜி.ஆர். மூலம்)		101.00
கத்திவாக்கம் தி. மு. க. கிளை செயலாளர் மூலம்:—		
தி. மு. க. கிளை	51.00	
திருவள்ளுவர் நற்பணி மன்றம்	10.00	
எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம்	10.00	
உதயசூரியன் நற்பணி மன்றம்	10.00	
அண்ணா படிப்படிகம்	10.00	
அண்ணா மறுமலர்ச்சி மன்றம்	10.00	
கலைஞர் கருணாநிதி மன்றம்	10.00	111.00
பெங்களூர் எம். வேணுகோபால் மூலம்:—		
பெங்களூர் விமானத் தொழிற்சாலை நண்பர்கள் சார்பாக	42.00	
பெங்களூர் தி. மு. க. எஸ். என். நாராயணன்	25.00	
,, டி. கோவிந்தன்	25.00	92.00
சென்னை-60 அண்ணா பொதுப்பணி மன்றம்		31.50
குன்றத்தூர் தொகுதி எம். கோபால் எம்.எல்.ஏ.		101.00
துலுக்கப்பட்டி மதராஸ் சிமெண்ட்ஸ் தி. தொ. மு. சங்கச் சார்பாக—பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ. மூலம்		75.00
சென்னை 90-வது வட்ட மாநகராட்சி உறுப்பினர் எம். இராசு		25.00
சென்னை-15 குமரன்நகர் இரா. லோகநாதன்		15.00
சென்னை 52-வது வட்டம் தி. மு. க. உறுப்பினர் குழுவின் சார்பாக—கு. மழுவழகன் மூலம்:—		
செ. செகதீசன்	25.00	
கு. கோபாலரத்தினம்	20.00	
எம். நடேசன்	11.00	
கு. மழுவழகன்	10.00	
கு. அருள்மொழி	10.00	
ஏ.எம்.எஸ். முகமது செரீப், மா.மதுரை, தாமோதரன், எம். என். பி. பிள்ளை ஆகியோர்	20.00	
நீலமேகம், அப்துல் சமது, முத்து, கே. டெரி, இராசு ஆகியோர்	15.00	
செயராமன், பெருமாள், லத்தீப், நீலகண்டன், சுந்தரம், மாரிமுத்து, பூபாலன், பழனிவேலு, மணி, வச்சிரா, இராசேந்திரன், நாகலிங்கம், தங்கய்யா, சைமன், தனபால், சகுந்தலா, ஏகாம்பரம் ஆகியோர்	34.05	
துக்காராம், கசபதி, தியாகராசன், கோதண்டன், மணி, அரிதாஸ், பொன்னம்பலம், சாந்தீபன், கசேந்திரன், இராசா, பாலகிருஷ்ணன், சோமுராசன், இராசன், ரங்கன், கண்ணப்பன், அழகுமணி, வாணன், இராசாராம், சம்பத், இராமமூர்த்தி, துரைசாமி, செல்வராசு, செயசந்திரன், சங்கமித்திரை, இராமசாமி, இராகவன், சகஜானந்தன், கல்யாணசுந்தரம் ஆகியோர்	28.00	173.05
கோவை மாவட்டச் செயலாளர் எஸ். ஏ. இராசமாணிக்கம் மூலம்:—		
கோவை நகர தி.மு.க.	101.00	
நகரச் செயலாளர் சி. ரங்கநாதன்	51.00	
கே. என். சின்னையன்	51.00	
10-வது வட்டாரச் செயலாளர் ச.அழகரசு	10.00	
15-வது வட்டார கிளை அ. வெங்கிடுபதி	10.00	
இராசாமணி	25.00	
18-வது வட்டாரக் கிளை சார்பாக	25.00	
காட்டூர் கோபால்	50.00	
எஸ். ஏ. இராசமாணிக்கம்	25.00	
வழக்கறிஞர் எஸ். சொக்கலிங்கம்	52.00	
கோவை வட்டக் கழகச் செயலாளர் தெ. கு. மெய்யப்பன்	51.00	
சூலூர் உ. சி. ந. இராசு	21.00	
கோவை வட்டத் துணைச் செயலாளர்	12.00	
,, பொருளாளர்	11.00	
புதுப்பாளையம் ஆ. சகநாதன்	5.00	500.00
தச்சநல்லூர் தி.மு.க. கிளை சார்பில் சு.சா. மதிநாதன் மூலம்		101.00
காரமடை கெ. சு. மணியம்		101.00
திண்டுக்கல் புலவர் செந்தமிழ்க் கல்லூரி, அண்ணா தொழிற்பயிற்சிக் கல்லூரி மாணவ – மாணவியர் சார்பில்		65.00
ஏற்காடு இரா. சகநாதன்		55.00
சென்னை-53 அம்பத்தூர் 'அறிஞர் அண்ணா அறிவகம்' செ. நாகநாதன்		51.00
குடந்தை 23-வது வட்ட தி.மு.க. இரா.கோவிந்தராசன்		50.00
அருப்புக்கோட்டை சிவ. சண்முகசுந்தரன்		50.00
வல்லம் பெ. கோபால் மூலம்		40.00
கோபால்பட்டி (திண்டுக்கல் வட்டம்) தி. மு. க. கிளை		25.00
அறந்தாங்கி வெ. இராமையா		25.00
மண்டபம் தி. மு. க. கிளை சார்பாக—கரு. சேது		25.00
தஞ்சை மாவட்ட வேளாண்மைத்துறை இரவு பாதுகாவலர்கள் சார்பாக—த. சீனிவாசன்		25.10
விழுப்புரம் ஈ. சாமிக்கண்ணு, சுப்பராயன் அன் கோ., ஏ. பெருமாள் நாட்டார், சுப்பிரமணி நாட்டார், தனசேகரன், பக்கிரிசாமி, நடேசன், நாகரத்தினம், இராமச்சந்திரன் ஆகியோர்		25.00
பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சிக்கூட நண்பர்கள் சார்பாக—அருளானந்தம்		15.10
சென்னை 72-வது வட்டம் எஸ். எஸ். ஆர். மன்றம்		15.00
போடிநாய்க்கனூர் கே. சோமசுந்தரம்		11.00
சென்னை-18 பி. ஜெயராஜ்		11.00
கடலூர் தி. மு. க. கி. கோவிந்தராசன்		11.00
வாணியம்பாடி ச. மாசிலாமணி		10.11
கன்னிவாடி டி. எஸ். மணி		10.00
டி. முருங்கப்பட்டி எம். ஆர். கணேசன்		10.00
திருவில்லிபுத்தூர் ஏ. வி. அனந்தநாராயணன்		10.00
திருவரங்கம் ஏ. பொன்னுசாமி		10.00
புதூர் ஆதமங்கலம் வெ. மு. பச்சமுத்து		10.00
சென்னை-1 எஸ். சுந்தரம்		10.00
காட்டூர் கே. சுப்பையன்		10.00
ஒரத்தநாடு இரா. சேது		10.00
திருவாரூர்–விசயபுரம் வி. சிங்காரம்		10.00
அறந்தாங்கி சுப. வேலவன்		10.00
கடப்பேரிக்குப்பம் கோ. பக்தவத்சலு		10.00
திசையன்விளை கே. தாமஸ்		10.00
கைலாசபுரம் பி. எஸ். ஜோதிமாணிக்கம்		10.00
முகவூர் மகளிர் மன்றம் இரா. சரசுவதி		7.00
எனச்சிபாளையம் ஏ. நரசிம்மன்		5.55
பெரியகொல்லப்பட்டி கே. முத்து		5.55
திருச்செங்கோடு செங்கோடன்		5.55
,, ஆர். பழனிசாமி		5.55
,, எம். பழனியப்பன்		5.55
ஒரகோலை எச். நஞ்சன்		5.00
கொடுவார்ப்பட்டி சண்முகநாதன்—சொக்கலிங்கம்		5.00
அரிமழம் பொ. பே. குமார்		5.00
திருச்சி–தெப்பக்குளம் கே. இராமையா		5.00
மதுரை-2 பி. சூடிக்கொண்டான்		5.00
பந்தல்குடி ஏ. தங்கவேலு		5.00
திருப்பரங்குன்றம் மு. முத்திருளன்		5.00
பட்டாபிராம் கடைவீதி ஏ. வரதன்		5.00
,, என். எஸ். மணி		5.00
,, டி. எஸ். மணி		5.00
செல்லப்பன்பேட்டை–பூதலூர் துரையரசன்		5.00
கொரடாச்சேரி இரா. இராசு		5.00
திருவாரூர் இரா. மல்லிகா		5.00
நாமக்கல் வி. சுப்பராயன்		5.00
,, வீ. சீனிவாசன்		5.00
,, இரா. முத்துசாமி		5.00
,, எஸ். இராமசாமி		5.00
,, மு. சின்னுசாமி		5.00
,, மு. கருப்பன்		5.00
,, பரமேசுவரன்		5.00
,, குமரன்		5.00
பெங்களூர்-1 ரா. கருணாகரன்		5.00
ஜி. கணேஷ்		5.00
பி. நாகோஜிராவ்		5.00
பி. சோமசேகர்		5.00
சிலைமான் பெ. காதர் அலி		5.00
தேனி எஸ். சண்முகக்கனி		5.00
மதுரை-9 சுப. இராமநாதன்		5.00
இராசிபுரம் ஏ. பெருமாள்		5.00
கோவை-12 எஸ். எஸ். சீனிவாசன்		5.00
மதுரை அ. தங்கவேலன்		5.00
திருச்சி கே. சாமி அய்யா		5.00
கே. துரைசாமிபுரம் வெங்கடாசலபதி		5.00
திருவில்லிபுத்தூர் மணிகண்ட நாராயணன்		5.00
தேவகோட்டை கே. ஆர். ஆறுமுகம்		5.00
நெய்வேலி.1 க. சோலை		5.00
பெங்களூர்-22 எம். கோவிந்தன்		5.00
சிதம்பரம் பா. அப்துல் மஜீத்		5.00
காஞ்சிக்கோவில் கே. பி. பழனிச்சாமி		5.00
ரூ. 3 வீதம்		
சங்கரன்கோவில் நீலகண்ட ஐயர், தேனி வன்னியராசன், சென்னை வீ. அண்ணாமலை, மு. சங்கரன் ஆக 4 பேர்		12.00
ரூ. 2 வீதம்		
திருச்செங்கோடு என். செங்கோடன், சாந்தமங்கலம் பாலசுப்பிரமணியம்		4.00
ரூ. 1 வீபிம்		
நெல்லை டவுன் ஆ. சங்கரன், நாகர்கோவில் தோழர்கள் என். மணி, யி. அய்யாப்பழம், பி. பாலையா, ஜி. சிவபாலன், ஒய். சுவாமிதாஸ், எம். இருதயம் ஆக 7 பேர்		7.00
ஆக மொத்தம்		1,31,449.53

நடக்க இருப்பவை

23--12--68

திருவொற்றியூர்

5-வது வார்டு தி.மு.க. உட்கிளைத் திறப்புவிழா; மாலை 6 மணிக்கு காலடிப்பேட்டை பூங்காவனபுரம் சாலையில்; தலைவர்: எம். ஏழுமலை; பேசுவோர்: எஸ்.ஜே. சாதிக் பாட்சா, கே.டி. எஸ். மணி, அ.பொ. அரசு எம். எல்.ஏ., மா.வெ, நாராயணசாமி, எஸ்.ஐ. வெங்கட்ராமன், வி. கோவிந்தசாமி எம்.சி., தா.வி. அன்புக்கண்ணன், மு.த. வாசுதேவன்.

24--12--68

கோகிலாபுரம்

அண்ணா -- எம்.ஜி.ஆர். பண்பாட்டுமன்றத் திறப்புவிழா; மாலை 5 மணிக்கு; தலைவர்: எஸ். கந்தசாமி; திறப்பாளர்: மா. இராசாங்கம் எம்.எல்.ஏ.; சிறப்புரை: சி. தமிழரசி, எம். இரத்தினம். (மணி–சாமி குழு கலைநிகழ்ச்சி உண்டு)

குழுக் கூட்டம்

"பெரியகுளம் நகர தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம், 25—12—68 மாலை 5 மணிக்கு பயணியர் விடுதியில் நடைபெறும்" என்று, நகரச் செயலாளர் எம். கே. ஆறுமுகம் அறிவிக்கிறார்.

நந்திமலையில் அண்ணா ஓய்வு

கருநாடக முதல்வரின் கனிவு மிக்க அழைப்பு

பெங்களூர், டிச. 21—

பெங்களூரிலிருந்து 40 மைல் தொலைவிலுள்ள நந்திமலைக் குன்றுகளில் மூன்றுவார காலம் வந்திருந்து ஓய்வெடுத்துச் செல்லுமாறு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களுக்குக் கருநாடக முதல்வர் வீரேந்திர பாட்டில் அழைப்பு விடுத்தார்.

அண்ணா அவர்கள் இங்கு தங்கி ஓய்வெடுப்பதற்கான அவசியமான எல்லா வசதிகளையும்தாம் கவனித்துக் கொள்வதாகவும் அவர் உறுதியளித்தார்.

நெல்லூருக்குச் செல்லும் வழியில் சென்னையில் அண்ணா அவர்களைச் சந்தித்தபோது அவர், இந்த அழைப்பினை நேரில் தெரிவித்தார்.

இத்தகவல்களை, முதலமைச்சர் வீரேந்திர பாட்டில் இங்கு இன்று கூறினார்.

"அண்ணா அவர்கள் களைப்புடன் காணப்பட்டார்" என்றும் அவர் தெரிவித்தார்.

"அறிஞர் அண்ணா அவர்கள் உங்கள் அழைப்பினை ஏற்றுக் கொண்டாரா?" என்று கேட்கப்பட்டபோது முதலமைச்சர் வீரேந்திர பாட்டில் கூறியதாவது:—

"அண்ணா அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடுமென்று எனக்குத் தோன்றியது; நந்திமலையின் தட்பவெப்பநிலை அவரது உடலுக்கு இதமளித்து நன்மை செய்யும் என்று நம்புகிறேன்."

கல்வி அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

டிச. 22, 23, 24: நாகர்கோயில் தொகுதி; 26: காலை 11 மணி: காரைக்குடி—மின்சார இரசாயனக் கருத்தரங்கு; மாலை 5 மணி: திருக்கோட்டியூர் ஆலய வரவேற்பு; மாலை 7 மணி: திருப்பத்தூர் பொதுக்கூட்டம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-19, அச்சிட்டு வெளியிடப்பட்டது